இணைந்த சேவைகளின் சுற்றறிக்கை: 03/2009

எனது இலக்கம் :பீஏ/சீ/எஸ்/6/4/வி.த.ப,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு –07
2009 செப்ரெம்பர் மாதம் 03 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள் யாவருக்கும்

<u>அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு 111 ஐ சேர்ந்த அலுவலர்களின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை</u>

2004.01.01 ஆந் திகதி தொடக்கம் 2006.12.31 ஆந் திகதி வரை அரச முகாமை உதவியாளர் சேவையில் நியமனங்கள் பெற்ற அலுவலர்களுக்கு பிரமாணம் குறிப்பின் பிரிவு 5:1 இல் விதித்துள்ளவாறு வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைவதற்காக 2010.12.31 ஆந் திகதி வரை அல்லது அவர்கள் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் தேவையை பூர்த்தி செய்கின்ற திகதி ஆகிய இரண்டு திகதிகளில் முதலாவதாக வரும் திகதி வரை சலுகை காலம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதன் படி வினைத்திறமை காண் தடைப் பரீட்சையில் சித்தியடையாமை காரணமாக சம்பள ஏற்றங்களை நிறுத்திவைப்பதற்கு நேரிடும் அலுவலர்களுக்கு 2010.12.31 ஆந் திகதி வரை சம்பள ஏற்றங்களை செலுத்தும்படி அறியத் தருகின்றேன். இது 2004.01.01 ஆந் திகதி தொடக்கம் 2006.12.31 ஆந் திகதி வரை திறந்த மற்றும் மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைந்து அரசாங்க முகாமை உதவியாளர் சேவைக்கு சேர்ந்த அலுவலர்களுக்கு ஏற்புடையதாகும்.

03. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆந் தேதிய அதிவிசேட வர்த்தமானி செயற்திட்ட விதிகள் (தொகுதி 1) இல் பிரிவு 110 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி அடைவதற்கு வழங்கப்படும் சலுகை காலத்திற்கு சமமான காலப்பகுதியிணை தகுதிகாண் காலப்பகுதியிலும் நீடிக்கப்படும்.

04. இவ் இணைந்த சேவைகள் சுற்றறிக்கை தாபன பணிப்பாளர் நாயகத்தின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படும்.

பி.பீ.பீ.எஸ். அபேகுணரத்ன
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு